**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 209/2025**
**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | திினேஷ்குமார் (PW5) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026 by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused produced through Video Conference. Accused Counsel present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது பெருந்துறை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.03.2025ம் தேதி ஈரோடு, நாடார் மேடு, பூமா ஹோட்டலில் பணிபுரியும் சிவகுமார் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் ஈரோடு தெற்கு காவல்நிலையத்தில் குற்ற எண்.70/2025 ச/பி.331(4), 305(a) BNS படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை தேடி வந்த நிலையில் மேற்படி வழக்கில் கடலூர் மாவட்டம், விருகாவூர் சன்னியாசி மகன் இருசன் என்பவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதும், மேற்படி இருசன் தற்சமயம் கடலூர் மத்திய சிறையில் இருந்து வருகிறார் என்ற விவரம் தெரியவரவே மேற்படி எதிரி இருசனை கடலூர் மத்திய சிறையில் வைத்து சம்பிரதாய கைது செய்து PT வாரண்ட் மூலம் சமூகம் Judicial Magistrate No.III நீதிமன்றத்தில் ஆஜர் செய்து மேற்படி எதிரியை ஒரு நாள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி கோரி மனு செய்து மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் 22.07.2025ம் தேதி மாலை 05.00 மணியிலிருந்து 23.07.2025 மாலை 05.00 மணி வரை போலீஸ் காவலில் எடுத்து மேற்படி எதிரி இருசனை 22.07.2025ம் தேதி மாலை 05.30 மணிக்கு ஈரோடு தெற்கு காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகள் சங்கர் மற்றும் கௌதம் ஆகியோர்கள் முன்னிலையில் வைத்து விசாரிக்க மேற்படி எதிரி இருசன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதில் ஈரோடு தெற்கு காவல்நிலைய குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்தை ஈரோடு இரயில் நிலையம் பின்புறம் பழைய பாழடைந்த இரயில்வே பணியாளர் குடியிருப்பில் மறைத்து வைத்திருப்பதாகவும், அதை நான் எடுத்து ஆஜர் செய்வதாகவும், மேலும் சிவகிரி காவல்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.04.16 08:11:14 +0530

நிலைய சரகம் தொப்பபாளையத்தில் பூட்டியிருந்த வீட்டின் பூட்டை உடைத்து வீட்டினுள் இருந்து பீரோவை உடைத்து துணிமணிகளை களைத்து பார்த்து போது எதுவும் இல்லை என்று தெரிவித்தார், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சங்கர் மற்றும் கௌதம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து அவர்கள் இருவரிடமும் கையொப்பம் பெற்றேன். என்னை 06.10.2025 அன்று சிவகிரி உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் சிவகிரி உதவி ஆய்வாளரிடமும் கூறினேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் சம்பவ இடத்திற்கு எதிரியை அழைத்து வந்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு சாட்சிகள் சங்கர் மற்றும் கௌதம் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் நான், சாட்சிகள் சங்கர் மற்றும் கௌதம் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த பக்கத்தில் கையொப்பம் செய்தோம் என்றால் கடைசி பக்கத்தில் கையொப்பம் செய்தோம். எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த உடன் சிவகிரி காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேனா என்றால் நீதிமன்றத்தில் ஒப்படைக்க நேரமானதால் தகவல் தெரிவிக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலம் தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.04.16 08:11:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.